செ.வெ.எண்:17 நாள்: 10.01.2018

**அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டத்தில் நடைபெற்ற கிராமப்புற, நகரப்புற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு முகாமினை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன் அவர்கள் துவக்கி வைத்து, 17 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.**

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டத்தில் நேஷனல் கலைக்கல்லூரி வளாகத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் சார்பில் கிராமப்புற, நகரப்புற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு முகாமினை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் **திரு.ஜெ.கே.என்.இராமஜெயலிங்கம்** அவர்கள் முன்னிலை வகித்தார்கள்.

மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா அவர்களும், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் குத்துவிளக்கேற்றி வைத்து, முகாமினை தொடங்கி வைத்து பார்வையிட்டார்கள்.

**இம்முகாமில், மாண்புமிகு தலைமைக்கொறடா அவர்கள் 17 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி, பேசியதாவது :-**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் கிராம மற்றும் நகர்ப்புற வேலைவாய்ப்பற்ற ஆண், பெண் இருவருக்கும் வேலைவாய்ப்பு உருவாக்கிடும் நோக்கில் வேலைவாய்ப்பு முகாம் நடத்திட ஆணைப்பிறப்பித்தார்கள். அதன்வழியில் செயல்படும் தமிழக அரசு இம்முகாம்களை சிறப்போடு நடத்தி வருகிறது.

இதில், அரியலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மூலம் 18 வயது முதல் 35 வயதிற்குட்பட்ட படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு 2017-18 ஆம் ஆண்டிற்கு மாவட்ட அளவிலும், ஒன்றிய அளவிலும் 7 வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட உள்ளது.

அதன்படி, அரியலூரில் மாவட்ட அளவில் வேலைவாய்ப்புத்துறையுடன் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் இணைந்து அரியலூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் 14.10.2017 அன்று வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்பட்டன. அதில் 2212 நபர்கள் கலந்துகொண்டார்கள். 54 தனியார் வேலைவாய்ப்பு முன்னணி நிறுவனங்கள் பங்குபெற்றன. அதில் 815 வேலைவாய்ப்பற்ற நபர்களுக்கு வேலைவாய்ப்பு ஆணைகள் வழங்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து, வட்டார அளவில் ஜெயங்கொண்டம் ஒன்றியத்தில் நேஷனல் கலைக்கல்லூரி வளாகத்தில் படித்த, வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு முகாம் இன்று (10.02.2018) சிறப்பாக நடைபெற்றது.

இம்முகாமில், 21 தனியார் முன்னணி நிறுவனங்கள் பங்குபெற்றன. இதில் 650 நபர்கள் கலந்துகொண்டதில், 202 நபர்களை வேலைவாய்ப்பு நிறுவனங்கள் தேர்வு செய்தது. தேர்வு செய்யப்பட்ட நபர்களுக்கு இன்று (10.02.2018) வேலைவாய்ப்பு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

எனவே, கிராமப்புற இளைஞர்கள் இதுபோன்ற வேலைவாய்ப்பு முகாம்களை பயன்படுத்தி தங்களுடைய கல்வி திறமைகளுக்கு ஏற்ப வேலையை பெற்று பயன்பெறுமாறும், வேலைவாய்ப்பை பெற்ற இளைஞர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன் என மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் பேசினார்கள்.

இம்முகாமில், திட்ட இயக்குநர் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் அ.லலிதா, உதவித்திட்ட அலுவலர்கள் அனுஷியா, எஸ்.சரவணபாண்டியன், ஜெயங்கொண்டம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஜெ.அமிர்தலிங்கம், பி.குருநாதன், நேஷனல் கல்லூரி குழுமம் நிறுவனர் எ.சிலம்புசெல்வன் மற்றும் அலுவலர்கள், ஏராளமான பட்டதாரி இளைஞர்கள் கலந்துகொண்டார்கள்.

செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், அரியலூர்.